**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 85/2017**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 25.02.2026 |
| **பெயர்** | **சீனிவாசரெட்டி** |
| **த/பெ** | **வேனுகோபால்ரெட்டி** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.41.p.m**

**குறுக்கு விசாரணை–**

6. என் சாட்சியத்தில் 7ம் பத்தியில் 1ம் பிரதிவாதி குடும்ப நபர்களுக்கும் 2ம் பிரதிவாதி குடும்ப நபர்கள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டு இருந்தது எந்த வருடம் என்றால் 1980. நேரடியாக தெரியாது, என் தந்தை கூறி தான் தெரியும். 1980–ல் எனக்கு 10 வயது. என் சாட்சியத்தில் 9ம் பத்தியில் பிரதிவாதிகளுக்கு அனுபவ பாத்தியதை மூலம் உரிமை உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாதிகளுக்கு வழக்கு சொத்து உரிமையானது என்று ஏற்றுக்கொண்டால் தான் அனுபவ பாத்தியதை வரும் என்றால் தெரியாது.

7. வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ 11 வரை தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும் என் சாட்சியத்தில் கூறியது போல் அது போலியான ஆவணங்களாக இருக்க முடியாது என்றால் சரியல்ல. 1950–ல் நிறைவேற்றப்பட்ட 3180, 3181, பி.சா.ஆ 3 மற்றும் பி.சா.ஆ 4 ஆவணங்களை கொண்டு நாங்கள் உரிமை கோருகிறோம் என்றால் சரிதான். வாதிகள் 1950–ற்கு முன்பாகவே வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ 9 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே வாதி ஆவணங்கள் உண்மைதன்மை உடையது என்றால் சரியல்ல. வாதியின் முன்னோர்களிடம் இருந்து தான் நாங்கள் வாங்கியுள்ளோம். மேற்சொன்ன சங்கதி தவறு என்றால் சரியல்ல.

8. என் சாட்சியத்தில் 12–ம் பத்தியில் காவல்நிலையத்தில் புகார் அளித்தோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அளித்தோம். 2ம் வாதி மீது புகார் அளிக்கப்பட்டு அது மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் Crl.OP.No. 29656/2013 and Crl.MP.No. 1/2013, வா.சா.ஆ 12 மூலம் அது ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்ன புகார் அளித்தோம் என்றால் வழக்கு சொத்தை அபகரித்தார்கள் என்று நில அபகரிப்பு தீர்ப்பாயம் மூலம் புகார் அளித்தோம். வா.சா.ஆ 12 வழக்கு சொத்து குறித்து மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மூலம் வழக்கு சொத்து குறித்து தீர்மானிக்கப்பட்டது.

9. ஐட்டம் 1 –ல் 575 –ல் 94 செண்ட், 26.01.1922–ல் 2ம் வாதியின் தகப்பனார் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அகு குறித்து எனக்கு தெரியாது. ஐட்டம் 2 –ல் 28 செண்ட் 26.01.1922–ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. ஐட்டம் 3 சொத்து குறித்த வரையில் 26.4.1922 கிரையம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. ஐட்டம்–4, 2–ம் வாதியின் பாட்டனாரான சையதுஇப்ராகிம் வாங்கினார் என்றால் தெரியாது. 15.08.1939–ல் அவர் காலமான பிறகு வாரிசுகளுக்குள் 1944ல் பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் சரியல்ல. 1944 பாகப்பிரிவினை ஏற்பட்ட பிறகு வழக்கு சொத்து முகமதுஅலிமரைக்காயருக்கு ஒதுக்கப்படடது என்றால் சரியல்ல. 21.05.2008 ல் 2ம் வாதி செட்டில்மெண்ட் ஒன்று எழுதிவைத்து, அதன் அடிப்படையில் வாதி சொத்தினை அனுபவித்து கொண்டு வருகிறார் என்றால் சரியல்ல.

10. 27.05.2008–ல் 2ம் வாதி, 1ம் வாதிக்கு முறையான வகையில் தான் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு பட்டா வாதியின் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வாதிகளின் சொத்தை நாங்கள் கூட்டுக்குடும்பமாக பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரியல்ல.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 01.09.p.m.**